*2023 மார்ச் 30*]
*நான் தலைமைப் பொறியாளரை அழைத்து, அது முக்கியமான சாலையாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நிதியாண்டிலேயே அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். மானியக் கோரிக்கை விவாதங்கள் முடிந்தவுடனேயே திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டிலேயே சாலை அமைக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**73—**

## தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

***26561—திரு. செ. சுந்தரராஜன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலம், சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட எஸ்.518 அ.குள்ளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் புதிய நவீன கட்டடம் கட்டப்பட்டு, 15-6-2013-ல் திறக்கப்பட்டு, சங்கம் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தற்போது சங்கத்திற்குப் புதிய கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

[*2023 மார்ச் 30*

**திரு. செ. சுந்தரராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் கழகத்தின் பொதுச் செயலாளரின் ஆசியோடு இக்கேள்வியினை கேட்கிறேன். அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டியில் சங்கத்தின் கூடுதல் கட்டடம் இருக்கிறது. நிருவாக வசதிக்காக வேண்டிதான் மற்றொரு கூடுதல் கட்டடம் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தக் கூடுதல் கட்டடத்தையும், அந்தப் பகுதியிலுள்ள இரண்டு கிராமங்களையும் சேர்த்து, ஒரே* society bit *1,* bit *2 என்ற கிராம கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது.* Bit *1,* bit *2 இரண்டிற்கும் ஒரே* society *ஆக இருக்கின்ற காரணத்தினால், அதிக அளவிலான மக்கள், தங்கள் நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக அச்சங்கத்தில் வைக்கிறார்கள். எனவே, அதற்கு சுற்றுச் சுவரும் அமைத்துத் தர வேண்டும்.*

*முற்பகல் 10-20*

*அதேபோல, நகைக் கடனில், ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டது போக, மறுபரிசீலனைக்காக மீண்டும் முறையீடு செய்தவர்களுடைய கடன் விண்ணப்பத்திற்கு இதுவரை தள்ளுபடியா, இல்லையா என்று தெரிவிக்காமல், இரண்டு ஆண்டுகளாகக் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அது தள்ளுபடியா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நகைக் கடனில் ஒரு வருடத்திற்கு 20 சதவீதம் என்று, 5 வருடங்களுக்கு பொது நகைக் கடன் தள்ளுபடி இருக்கிறது. அதில் 8 சதவீதம், 9 சதவீதம் மட்டுமே ஆண்டாண்டிற்கு அந்தந்த சங்கங்களுக்கு கொடுப்பதனால், சங்கங்கள் நலிவடைந்து வருகின்றன. அந்த நிதியையும் உடனடியாக தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டிருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவுச் சங்கமானது, நல்ல நிலையில் இயங்கக்கூடிய*

*2023 மார்ச் 30*]

*சங்கமாக இருக்கிறது. ஏறத்தாழ, 20 கோடி ரூபாய் அளவில் நகைக் கடன் வரவு–செலவு செய்யக்கூடிய கூட்டுறவுச் சங்கமாகும். அதைப்போல பயிர்க் கடன், இன்னும் இதர வகைகள் என்று 20.92 கோடி ரூபாய் அளவிலான வரவு–செலவுகள் நடைபெறுகின்ற சங்கமாகவும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அளவிற்கு இன்னும் கூடுதலான கட்டடத்தை நிர்வாக வசதிக்கென்று கேட்கின்றார்கள். ஏழு நியாய விலைக் கடைகளும் அதனுள் இருக்கின்றன. தேவைப்பட்டால், துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

**திரு. செ. சுந்தரராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எடப்பாடி ஐயா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஏற்காட்டில் கூட்டுறவு பயிற்சி மையம் ஒன்று 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. பாதி வேலைகள் நடந்து முடிந்த நிலையில், அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. எனவே, இதற்கு முன் இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஆரம்பிக்காமல் விட்டுவிட்டார். தற்போதுள்ள, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களாவது பெரிய மனது வைத்து, இதனை ஆரம்பிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எப்போதுமே பெரிய மனசுதான்.*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*